S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி ஜனவரி 24 * 2026 * மலர் -1 * இதழ்-235* VOL-1 * ISSUE-235 விலை ரூ.3 * பக்கம் -4

## சட்டமன்றப் பேரவையில், மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டம் தொடர்பான அரசினர் தனித் தீர்மானம்!

### முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்மொழிந்து உரையாற்றினார்!!

சென்னை, ஜன.24–

கிராமப்புற வேலை வாய்ப்புக்காக கடந்த 2005ம் ஆண்டு, ‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம்’ கொண்டு வரப்பட்டது. அதில், தகுதியுள்ள ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்துக்கும் ஒரு நிதியாண்டில் 100 நாட்கள் வேலை அளிக்கப்படுகிறது. இது 100 நாள் வேலைத்திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தை மாற்ற வகை செய்யும், வளர்ந்த பாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்பு சட்ட மசோதாவை மத்திய மந்திரி சிவராஜ் சிங் மக்களவையில் கடந்த டிசம்பரில் அறிமுகம் செய்தார். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மசோதா நிறைவேற்றப்பட்ட நிலையில் ஜனாதிபதி திரவுபதி முர்மு அதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.



புதிய மசோதாவின் படி, ஓராண்டில் 100 நாள் வேலைவாய்ப்பு என்பது 125 நாள்களாக உயர்த்தப்பட உள்ளது. ஆனால், 100 சதவீதம் மத்திய அரசு நிதியளித்து வந்த இத்திட்டத்துக்கு இனி மாநில அரசுகள் 40 சதவீதம் நிதியளிக்கும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா மாநில அரசுகள் மீது நிதி சுமையை ஏற்றும் வகையில் இருப்பதாகவும், மகாத்மா காந்தி பெயரை நீக்குவதற்கும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் ஊரக வேலைவாய்ப்பு திட்டம் தொடர்பாக இன்று சட்ட சபையில் சிறப்பு தீர்மானம் கொண்டு வரப்படும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். நேற்று சட்டசபையில்கவர்னர்உரைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக நடந்த விவாதத்தின்போது, “100 நாள் வேலை வாய்ப்பு திட்டம்,150 நாட்களாக உயர்த்தப்படும் என்று திமுக தேர்தல் அறிக்கையில் அறிவித்தோம். அதை மறுக்கவில்லை. இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்திருந்தால் அதனை நிச்சயமாக நிறைவேற்றி இருப்போம்.

மத்தியில் பா.ஜ.க. தான் ஆட்சியில் இருக்கிறது. நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி தான் வருகிறோம். இது தொடர்பாக சட்டசபையில் நாளை (இன்று) தீர்மானம் கொண்டுவர உள்ளோம்” என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டா லின் தெரிவித்தார்.

இந்நிலையில் சட்ட மன்றத்தில் 100 நாள் வேலை திட்டத்திற்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அந்ததீர்மானத்தில்காந்தி பெயர்நீக்கத்திற்கு கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.



கோவை மாவட்டம், பொள்ளாச்சி நகராட்சியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமில் ஈஸ்வரசாமி எம்.பி., கலெக்டர் பவன்குமார் கிரியப்பனவர் ஆகியோர் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினர். அருகில் சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி, நகராட்சி தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், மாவட்ட சுகாதார அலுவலர் பாலுசாமி ஆகியோர் உள்ளனர்.



தர்மபுரி மாவட்டம், அரூர் நகராட்சிக்குட்பட்ட லிங்காபுரத்தில் தார்சாலை அமைக்க கோரி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து பாதித்தது.



குடியரசு தினம் வருவதை யொட்டி கோவை டவுன் ஹால் பகுதியில் தேசியக்கொடி தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

### சாத்தூர் அருகே விபத்து:

## லாரி மீது ஆம்னி பஸ் மோதி போலீஸ்காரர் பலி!



சாத்தூர். ஜன.24–

சாத்தூர் அருகே லாரி மீது ஆன்மி பஸ் மோதி போலீஸ்கார் பலியானார். இதில் 8 பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

சென்னையிலிருந்து 47 பயணிகளுடன் குமரி மாவட்டம் களியக்காவிளை நோக்கி தனியார் ஆம்னி சொகுசு பேருந்து சென்றது. இப்பேருந்தை சென்னையை சேர்ந்த டிரைவர் அரிராம் பாரத்(27) ஓட்டிச் சென்றுள்ளார். விருதுநகர் – குமரி தேசிய நெடுஞ்சாலையில் இன்று அதிகாலை சென்று கொண்டிருந்தபோது சாத்தூர் அருகே எட்டூர்வட்டம் தனியார் சுங்கச்சாவடி அருகே சிமெண்ட் லோடு ஏற்றிச் சென்ற சரக்கு லாரி மீது பேருந்து மோதியது. இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த களியக்காவிளையை சேர்ந்த சென்னை புழல் சிறை காவலர் லெனின்(27) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டது. மேலும் 8 பயணிகள் காயத்துடன் மீட்கப்பட்டு சாத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். இந்த விபத்து குறித்து வச்சகாரப்பட்டி போலீஸார் மதுரை திருமங்கலத்தைச் சேர்ந்த லாரி டிரைவர் முகமது சுகைல் அக்தர்(25) மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



கோயம்புத்தூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் டெலினா கோங்டுப் தலைமையில் பெண்களுக்கான சிறப்பு குறை கேட்பு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் காவல்துறை அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.



காரியாபட்டி அருகே முஷ்டகுறிச்சியில் இயங்கி வரும் நெல் கொள்முதல் நிலையத்தில், கொள் முதல் செய்த நெல்கள் மூட்டையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் காட்சி.

## அ.ம.மு.க. துணைப்பொதுச்செயலாளர் கட்சியில் இருந்து நீக்கம்!

### ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்!!

சென்னை, ஜன.24–

அ.தி.மு.க. கூட்டணி வைக்க எதிர்ப்பு தெரிவித்தால் அ.ம.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மாணிக்கராஜா கட்சியில் இருந்து நீக்கப் பட்டார். இதனால் அவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலை யில் தி.மு.க.வில் இணைந்தார். அ.ம.மு.க. துணைப்பொதுச்செயலாளர் மாணிக்க ராஜா, கட்சியில் இருந்து நீக்கப்பட்டு ள்ளதாக அக்கட்சியின் தலைவர் டி.டி.வி. தினகரன் அறிவித்துள்ளார். அ.ம.மு.க. தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

கழகத்தின் கொள்கை குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரனான வகையில் செயல்பட்டதாலும், கழகத்தின் கண்ணியத்திற்கு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாலும், கழகக் கட்டுப்பாட்டை மீறி கழகத்திற்கு களங்கமும் அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், கழக துணைப் பொதுச்செயலாளர் எஸ்.வி.எஸ்.பி. மாணிக்கராஜா அவர்கள் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் இன்று முதல் நீக்கி வைக்கப்படுகிறார். கழக உடன்பிறப்புகள் யாரும் இவருடன் எவ்விதத் தொ டர்பம் வைத்துக்கொள்ளக்கூடாது எனக் கேட்டு க்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து அ.ம.மு.க. துணைப் பொதுச் செயலாளர் எஸ்.வி.எஸ்.பி.மாணிக்க ராஜா இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்.

மேலும் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அ.ம.மு.க. செயலாளர் ரத்தினராஜ், மத்திய மாவட்ட செயலாளர் டெ ல்லஸ், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராமச்சந்திரமூர்த்தி ஆகியோரும் தி.மு.க.வில் இணைந்தனர்.



# பாஜக விவசாயிகள் விழிப்புணர்வு மாநாட்டிற்காக பாராட்டு விழா!

ஈரோடு, ஜன.24

பாரதிய ஜனதா கட்சி தமிழ்நாடு விவசாய அணி விவசாயிகள் விழிப்புணர்வு மாநாடு வெற்றிக்காக உழைத்த நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா காளிங்கராயன் பாளையத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில விவசாய அணி தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த பாராட்டு விழாவில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விவசாய அணியை சேர்ந்த அனைவரும் வருகை புரிந்து இருந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மாநிலச் செயலாளர் பன்னீர்செல்வம், பாஜக ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் எஸ்.எம்.செந்தில், விவசாய அணி மாவட்ட தலைவர் சந்திர சேகரன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சுமார் 400க்கும் மேற்பட்ட விவசாய அணியை சேர்ந்தவருக்கு சைவ அசைவ விருந்து அளிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு விவசாய அணி மாநில தலைவர் நாகராஜ் பேட்டி அளித்தார்.

தமிழக விவசாய வரலாற்றில் ஒரு மைல்கல்லாக, இந்திய வரலாற்றிலேயே இதுவரை இல்லாத வகையில் மத்திய வேளாண் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் சுமார் 12 மணி நேரம் தொடர்ச்சியாகப் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இந்தச் சிறப்பான பயணத்தின்போது விவசாயிகள்சந்திப்பு, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுடனான கலந்துரையாடல், இயற்கை விவசாயிகள் மற்றும் பெண் விவ சாயிகளுடனான ஆலோசனைகள் எனப் பலதரப்பட்ட நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. பொங்கல் விழா, பிரம்மாண்ட விவசாயிகள்மாநாடு, கண்காட்சி மற்றும் மத்திய அமைச்சரின் மாட்டு வண்டிப் பயணம் ஆகியவை இந்த நிகழ்விற்கு மேலும் மெருகூட்டின.

குறிப்பாக, விவசாயிகள்தங்கள்கோரிக்கைகளை வலியுறுத்தி சுமார் 25 கிலோவிற்கும் அதிகமான எடையுள்ள மனுக்களை அமைச்சரிடம் நேரடியாகச் சமர்ப்பித்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, உழவர் உற்பத்திக் குழுக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து விவசாயிகளை வெற்றிகரமான வியாபாரிகளாக மாற்றும் நோக்கில், இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் ஒரு புதிய குழு அமைக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்துள்ளார். அதேபோல், ஈரோடு மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று அங்கு மண்டல மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மாநாட்டின் மிக முக்கிய சிறப்பம்சமாக, எவ்வித அரசியல் தூண்டுதலோ அல்லது பணம், மது, பிரியாணி போன்ற எதிர்பார்ப்புகளோ இன்றி, சுமார் 22,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் லட்சியத்திற்காகத் தாங்களாகவே முன்வந்து திரண்டனர்.

காஞ்சிபுரம் முதல் கன்னியாகுமரி வரைதமிழகத்தின்பல்வேறு பகுதிகளிலிருந்து நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தங்களின் சொந்த வாகனங்களில் வந்து இந்த நிகழ்வை ஒரு மாபெரும் வெற்றியாக மாற்றினர். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வைச் சிறப்பாக ஒருங்கிணைத்த அனைத்து நிர்வாகிகள், மகளிர் அணியினர் மற்றும் விவசாயப் பெருமக்களுக்கு மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்படுகின்றன. என்று பேட்டியளித்தார். இந்த நிகழ்ச்சியின் போது ஈரோடு தெற்கு மாவட்ட விவசாய அணி துணைத்தலைவர்கள் நவநீதகிருஷ்ணன், அம்மன் டெக்ஸ் நமச்சிவாயம் உட்பட ஏராளமானோர் இருந்தனர்.



# களக்காட்டில் எஸ்டிபிஐ கட்சியின் மகளிரணி மாவட்ட புறநகர் செயற்குழு கூட்டம் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றம்!

நெல்லை, ஜன.24

நெல்லை மாவட்டம் களக்காட்டில் எஸ்டிபிஐ கட்சியின் மகளிர் அணி (விம்) புறநகர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட தலைவர் ஜன்னத் ஆலிமா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொதுச்செயலாளர் வீரை ஜன்னத் வரவேற்று பேசினார். மாவட்ட துணைத்தலைவர் கல்லிடை பீர்பாத்து, மாவட்ட செயலாளர் பத்தமடைபானு , மாவட்ட செயற்குழு உறுப்பினர் பெனாசிர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக எஸ்டிபிஐ கட்சியின் புறநகர் மாவட்ட தலைவர் எம்.எஸ்.சிராஜ், மாவட்ட பொதுச் செயலாளர் களந்தை மீராசா ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். இதில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. வருகின்ற ஜனவரி 26 குடியரசுதின விழா கொடியேற்றம் மகளிர் அணி சார்பாக புறநகர் மாவட்டம் முழுவதும் சிறப்பாக நடத்தவும், மூலைக்கரைப்பட்டியிலிருந்து நாங்குநேரி, திருநெல்வேலிக்கு கூடுதல் அரசு பேருந்து இயக்கவும், பத்தமடை பேரூராட்சிக்குட்பட்ட அப்துல்கலாம் தெருவிற்கு குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. பலமுறை பேரூராட்சியிடம் புகார்மனு அளித்தும் நடவடிக்கை இல்லை எனவே மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க மகளிரணி வலியுறுத்தல், புறநகர் மாவட்டத்தில் மகளிருக்கான BLA 2 வேலைகளை துரிதப்படுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதில் அம்பை சட்டப்பேரவை தொகுதி தலைவர் பீர்பாத்து, தொகுதி செயலாளர் அஹமதா, நாங்குநேரி சட்டப்பேரவை தொகுதி தலைவர் ஜன்னத்துல் பிர்தௌஸ், தொகுதி துணை செயலாளர் ரோஷன், தொகுதி பொருளாளர் மெஹராஜ் பேகம், மற்றும் மூலைக்கரைப்பட்டி பானுநியாஸ், ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக எஸ்டிபிஐ கட்சி மகளிர் அணி மாவட்ட செயலாளர்லைலத்துல்அதிஹா நன்றி கூறினார்.



சந்திரபுரம் ஊராட்சியில் குடிநீர், மின்விளக்கு,சாலை, உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கவில்லை என ஊராட்சி மன்ற தலைவரை கண்டித்து அலுவலகம் முன்பு அமர்ந்து உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# காங். மாவட்டத் தலைவராக நியமிக்கப்பட்ட விஜய் இளஞ்செழியனுக்கு உற்சாக வரவேற்பு!



திருப்பத்தூர் ஜன.24

திருப்பத்தூர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் புதிய மாவட்டத்தலைவராக நியமிக்கப்பட்ட விஜய் இளஞ்செழியனுக்கு, திருப்பத்தூர் நகரில் கட்சி சார்பில் சிறப்பான வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை முன்னிட்டு, திருப்பத்தூர் புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள ராஜீவ் காந்தி சிலைக்கு, புதிய மாவட்டத் தலைவர் விஜய் இளஞ்செழியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, திருப்பத்தூர் நகரில் உள்ள காங்கிரஸ் கட்சி தலைமை அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று, அங்கு அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு மாநில பொதுக்குழு உறுப்பினர் கிஷோர் பிரசாந்த் தலைமை தாங்கினார். புதிய மாவட்டத் தலைவர் விஜய் இளஞ்செழியனுக்கு சால்வை அணிவித்து, கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட இளைஞர் காங்கிரஸ்தலைவர்பார்த்திபன், மாவட்ட செயலாளர் ரஜினி, நகர தலைவர் எஸ் வந்த் உள்ளிட்ட பல்வேறு பொறுப்பாளர்கள் மற்றும் ஏராளமான காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



# சாலை பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி!

ஈரோடு,ஜன.24

ஈரோடு மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு வார விழாவினை முன்னிட்டு, பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு சி.என்.சி (CNC) கல்லூரியில் மாணவமாணவியருக்கு ஹெல்மெட் அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஈரோடு வடக்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இருசக்கர வாகனங்களை ஓட்டும்போது தரமான தலைக்கவசம் அணிவது எவ்வாறு உயிரைக் காக்கும் என்பது குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டது. விபத்து நேரங்களில் ஏற்படும் உயிரிழப்புகளைத் தவிர்க்கவும், பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யவும் மாணவர்கள் போக்குவரத்து விதிகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில்போக்குவரத்துகாவல் உதவி ஆய்வாளர் சண்முகமூர்த்தி, சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரன், தலைமை காவலர் சத்யா மற்றும் போக்குவரத்து காவல்துறையினர் உட்பட கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் ஏராளமான மாணவமாணவியர் கலந்து கொண்டனர். மாணவர்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்ப ட்டன.

# 6 மாதங்களாக குடிநீரின்றி தவிக்கும் இந்திராநகர் மக்கள்; அதிகாரிகளின் அலட்சியத்தால் அவதி!

கிருஷ்ணகிரி ஜன.24

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த பண்ணந்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட இந்திரா நகர் கிராமத்தில் சுமார் 350 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன இந்த கிராம மக்கள் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக கடும் குடிநீர் தட்டுப்பாட்டினால் பெரும் அவதியுற்று வருகின்றனர். இதில் கிராம மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அங்கு அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கடந்த பல மாதங்களாகப் பயன்பாடின்றி வெறும் காட்சிப் பொருளாகவே நிற்கிறது. தொட்டிக்கு நீர் ஏற்றப்படாததால், கிராமத்திலுள்ள பொதுக்குழாய்கள் அனைத்தும் வறண்டு போயுள்ளன.

குடிநீர் விநியோகம் முற்றிலும் நிறுத்தப்பட்டதால், அன்றாடத் தேவைகளுக்கும் குடிநீருக்கும் மக்கள் பல கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று, விவசாயக் கிணறுகள் மற்றும் தனியார் தோட்டங்களில் நீர் பிடித்து வர வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

குறிப்பாக பெண்கள் மற்றும் முதியவர்கள் குடிநீருக்காக அலைந்து திரிவது பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கிராம மக்கள் ஊராட்சி நிர்வாகத்திடமும்,

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் பலமுறை புகார் அளித்தும் இதுவரை



எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வேதனையுடன் தெரிவிக்கின்றனர் "பலமுறை மனு அதிகாரிகள் மெத்தனப் போக்கையே கடைபிடித்து வருகின்றனர்" என்பது பொது மக்களின் குற்றச்சாட்டாக உள்ளது. தங்கள் அடிப்படைத் தேவையான குடிநீரை வழங்க மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட வேண்டும் என்றும், செயல்பாடின்றி உள்ள குடிநீர் விநியோகக் கட்டமைப்பை சரிசெய்து தடையின்றி குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்திரா நகர் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ந்து இதே நிலை நீடித்தால், சாலை மறியலில் ஈடுபட உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபடவும் கிராம மக்கள் ஆலோசித்து வருகின்றனர்.




# இந்தியாவில் ஸ்கோடா ஆட்டோ புதிய குஷாக் மாடலை அறிமுகப்படுத்துகிறது!




சேலம், ஜன.24


ஸ்கோடா ஆட்டோ இந்தியா புதிய குஷாக் ஐ அறிமுகப்படுத்தி, மதிப்பு, பாதுகாப்பு, இயக்கத் தன்மை ஆகியவற்றை புதிய வரையறையில் கொண்டு வந்து, ஐரோப்பிய தொழில்நுட்பத்தை அனைவருக்கும் எளிதாக அணுகக்கூடியதாக மாற்றும் தனது திட்டத்தை மேலும் வலுப்படுத்துகிறது. குஷாக் , இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் பிராண்டின் முதல் வாகனமாகும் மற்றும் இந்தியாவில் நிறுவனத்தின் வளர்ச்சியை வேகமாக முன்னெடுத்துள்ளது. புதிய எட்டுஸ்பீடு டார்க் கன்வெர்டர் ஆட்டோமேட்டிக் டிரான்ஸ்மிஷன், ரியர் சீட் மசாஜ் செயல்பாடு மற்றும் பல புதிய அம்சங்கள் மற்றும் ஸ்டாண்டர்ட் உபகரணங்கள் போன்ற பிரிவில் முதல் முறை தொழில்நுட்பங்களுடன், புதிய குஷாக் இந்திய சாலைகளில் ஐரோப்பிய பொறியியலை மேலும் அணுகக்கூடியதாக மாற்றும் ஸ்கோடா ஆட்டோ இந்தியாவின் திட்டத்தை பின்பற்றுகிறது.

ஸ்கோடா ஆட்டோ இன் சிஇஓ கிளவுஸ் ஜில்மர் கூறியதாவது “புதுப்பிக்கப்பட்ட குஷாக், சர்வதேச சந்தைகளில் ஸ்கோடா ஆட்டோ வளர்ச்சியை முன்னெடுக்க இந்தியா எவ்வளவு முக்கியமான தளமாக உள்ளது என்பதை மேலும் வலியுறுத்துகிறது. குஷாக், இந்திய வாடிக்கையாளர்களிடையே மட்டுமல்லாமல் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஏற்றுமதி மாடலாகவும் மிகக் குறுகிய காலத்திலேயே உறுதியான இடத்தைப் பெற்றுள்ளது. ஸ்கோடா ஆட்டோ இந்தியா பிராண்டு டைரக்டர் ஆஷிஷ் குப்தா கூறியதாவது,“ஸ்கோடாவில், எங்கள் குறிக்கோள் ஐரோப்பிய தொழில்நுட்பத்தை அனைவருக்கும் எளிதாக அணுகக்கூடியதாக மாற்றி, இந்தியாவின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் கிடைக்க வைப்பதாகும். புதிய குஷாக் ஐ அறிமுகப்படுத்தி, எங்கள் வரிசையில் முன்னணி ‘உண்மையான ஆட்டோமேட்டிக்’ எஸ்யூவி களை வழங்கும் பாரம்பரியத்தை மேலும் வலுப்படுத்துகிறோம். இது பாதுகாப்பு, வசதி, வடிவமைப்பு மற்றும் சுலபமான அம்சங்களை ஸ்டாண்டர்டாக வழங்குகிறது மற்றும் நமது பரிசோதிக்கப்பட்ட ஐரோப்பிய பொறியியலால் உருவாக்கப்பட்டுள்ளது.

நாம் எப்போதும் வாடிக்கையாளர்களின் கருத்துக்களை கேட்கிறோம், புதிய குஷாக் ஐ அறிமுகப்படுத்துவது, வளர்ந்து வரும் ஸ்கோடா குடும்பத்திற்காக எங்கள் வரிசையை நவீனமாகவும் பொருத்தமானதாகவும் வைத்திருப்பதில் அடுத்த படியாகும்.” ஸ்கோடா ஆட்டோ இந்தியா வின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் புதிய குஷாக் க்கான முன்பதிவு ரூபாய்.15,000 தொகையில் திறக்கப்பட்டுள்ளது 2026 மார்ச் மாத இறுதியில் இருந்து டெலிவரி தொடங்கும்.புதிய குஷாக் அதன்சிறந்த ஓட்டத்தன்மைகளையும் 188mm கிரவுண்ட் கிளியரன்ஸ் ஆகியவற்றுடன், சாலையிலும் தடைகளை கடந்து செல்லும் திறனையும் உயர் வேகத்தில் நிலைத்திருக்கும் சக்தியையும் வழங்குகிறது.

இது பிரிவில் முதல்முறையாக புதிய எட்டுஸ்பீடு டார்க் கன்வெர்டர் ஆட்டோமேட்டிக் டிரான்ஸ்மிஷன் அம்சத்தைக் கொண்டுள்ளது. இந்த டிரான்ஸ்மிஷன், திறமையான, சக்திவாய்ந்த மற்றும் பரிசோதிக்கப்பட்ட 1.0 டிஎஸ்ஐ எஞ்சினுடன் இணைக்கப்பட்டுள்ளது, இது 85கேடபிள்யூ சக்தியையும் 178 என்எம் டார்க் அளவையும் வழங்குகிறது.

# OPPO Reno15 Series: AI & PureTone தொழில்நுட்பத்துடன் டிராவல் போட்டோகிராபி புதிய உயரம்!



கோயம்புத்தூர், ஜன.24

OPPO India நிறுவனம் தனது புதிய Reno15 Seriesஐ அறிமுகம் செய்துள்ளது; இதில் Reno15 Pro 5G, Reno15 Pro Mini 5G மற்றும் Reno15 5G ஆகிய மூன்று மாடல்கள் இடம்பெறுகின்றன. சிறிய பிரீமியம் ஸ்மார்ட்போன்களுக்கு அதிகரித்து வரும் தேவை காரணமாக, Reno வரிசையில் முதல் முறையாக Pro Mini மாடலை OPPO அறிமுகப்படுத்தியுள்ளது. பயணிகள் மற்றும் போட்டோகிராபி ஆர்வலர்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த வரிசை, நேர்த்தியான HoloFusion Design, அல்ட்ராஸ்லிம் வடிவமைப்பு மற்றும் IP66, IP68, IP69 ரேட்டிங் கொண்ட உறுதியான கட்டமைப்புடன் வருகிறது.Reno15 Pro 5G மற்றும் Reno15 Pro Mini 5G மாடல்களில் 200MP அல்ட்ராகிளியர் மெயின் கேமரா, 50MP டெலிபோட்டோ மற்றும் 50MP அல்ட்ராவைட் கேமராஅமைப்பு வழங்கப்பட்டுள்ளது. PureTone Imaging Technology இயற்கையான நிறங்களையும், துல்லியமான விவரங்களையும் பதிவு செய்ய உதவுகிறது. இதனுடன் Popout, AI Editor 3.0, AI Portrait Glow, AI Eraser, AI Livephoto 2.0 போன்ற பல AI வசதிகள் சேர்ந்து, போட்டோக்கள் மற்றும் வீடியோக்களை ஸ்டுடியோ தரத்தில் எளிதாக உருவாக்க அனுமதிக்கின்றன.

அனைத்து முக்கிய கேமராக்களிலும் 4K HDR 60fps வீடியோ பதிவு வசதியும் வழங்கப்பட்டுள்ளது.பெர்ஃபார்மன்ஸில், Pro மாடல்களில் MediaTek Dimensity 8450, Reno15 5Gல் Snapdragon 7 Gen 4 ப்ராசஸர் பயன்படுத்தப்பட்டுள்ளது. 6500mAh / 6200mAh பேட்டரி, 80W SUPER VOOC™ மற்றும் 50W AIRVOOC™ சார்ஜிங், புதிய ColorOS 16 (Google Gemini ஆதரவு) ஆகியவை முழுமையான அனுபவத்தை உறுதி செய்கின்றன. இதனுடன் OPPO தனது எக்கோசிஸ்டத்தை விரிவுபடுத்தும் வகையில் OPPO Pad 5 மற்றும் OPPO Enco Buds3 Pro+ சாதனங்களையும் அறிமுகம் செய்துள்ளது; இதன் மூலம் OPPO தனது “ஸ்மார்ட் & கனெக்டட்” உலகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சென்னை, பெரம்பூர் சந்திரயோகி சமாதி சாலையில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் திருமண மாளிகை இறுதிக்கட்டப் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தி, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார். இந்த ஆய்வின்போது மேயர்ஆர்.பிரியா சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர்கோ.பிரகாஷ், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர்எச்.ஆர்.கௌஷிக் மண்டலக் குழுத்தலைவர்சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ கண்காணிப்புப் பொறியாளர்ராஜன்பாபு, மண்டல அலுவலர் சொக்கலிங்கம், மாமன்ற உறுப்பினர் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.




கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.18க்குட்பட்ட சங்கனூர் பிரதாணாலைபுதுத்தோட்டம்பகுதியில்சாலையோரங்களில்குப்பைகொட்டப்பட்டுள்ளதை மாநகராட்சி ஆணையாளர்மா.சிவகுரு பிரபாகரன் , நேரில் சென்று, பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, சாலை ஓரங்களில்குப்பைகொட்டாதவாறுகண்காணிப்புகேமராபொருத்தி கண்காணித்திடவும் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் உதவி நகர்நல அலுவலர் மரு.பூபதி, உதவி ஆணையர்மகேஷ்கனகராஜ், மண்டல சுகாதார அலுவலர்முருகன், சுகாதார ஆய்வாளர்பவுன்ராஜ் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.



தருமபுரி மாவட்டம், அரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், நேரில் பார்வையிட்டு, கோப்புகளை ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன் அரூர் வட்டாட்சியர் பெருமாள், உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, உங்களைத் தேடி உங்கள் ஊரில்திட்டத்தின்கீழ்குடியாத்தம்நகராட்சி,புதுப்பேட்டையில்அமைந்துள்ளதிருவள்ளுவர் அரசு நிதி உதவி தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் குறித்து ஆய்வுமேற்கொண்டுமாணவ,மாணவிகளுக்குவழங்கப்படும்காலைஉணவினைதரத்தினை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) சேகவன், நகராட்சி பொறியாளர்ரமேஷ் குமார் வட்டாட்சியர் பழனி ஆகியோர் உடனிருந்தனர்.



# வத்தலகுண்டு அ.தி.மு.க. பேரூர் கழகம் சார்பில் எம்ஜிஆர் பிறந்த நாள் விழா!

வத்தலகுண்டு,ஜன.24

வத்தலகுண்டு அதிமுக பேரூர் கழகம் சார்பில் தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர் 109வது பிறந்த நாளை முன்னிட்டு வத்தலகுண்டு நகரச் செயலாளர் பீர்முகமது தலைமையில் வத்தலகுண்டு பேருந்து நிலையம்,காளியம்மன் கோவில்,மார்க்கெட்வீதி,அருணாச்சலபுரம்,பெத்தானியாதெரு,மேலமந்தை தெரு,காந்திநகர் ஆகிய பகுதிகளில் இனிப்பு,அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது.மேலமந்தைதெரு அதிமுக இளைஞரணி சார்பில் எம்ஜிஆர் பிறந்த நாள் கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் நகர துணை செயலாளர் குமரேசன்,நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் அசோக்ராஜா,வார்டு செயலாளர்கள்சுரேஷ், முனியாண்டி,வெங்கடேஷ்,கனிபாய்,செல்வம்,நாகராஜ்,கட்டாரி, முத்துகிருஷ்ணன் நகரபொறுப்பாளர்கள்நாகராஜ்,காமாட்சி மற்றும் கணேசன் வாசிமலை உள்பட நகர நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# யமஹா மியூசிக் இந்தியா புதிய PSRI தொடர் கீபோர்டுகள் அறிமுகம் – இந்தியாவில் வடிவமைப்பு, இந்திய இசைக்காக உருவாக்கம்!

சென்னை, ஜன.24




யமஹா மியூசிக் இந்தியா இன்று PSRI610 மற்றும்PSRI510எனும் புதிய PSRI தொடர் போர்ட்டபிள் கீபோர்டுகளை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தியது. இந்திய இசைக்கலைஞர்கள், மாணவர்கள் மற்றும் மேடை கலைஞர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த கீபோர்டுகள், இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். இந்திய பாரம்பரிய இசை முதல் நவீன மற்றும் இந்தியமேற்கத்திய கலவை இசை வரை பல்வேறு பாணிகளை ஆதரிக்கும் வகையில் இந்த தொடர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிமுகம் குறித்து யமஹா மியூசிக் இந்தியா விற்பனை பிரிவு தலைவர் திரு. ரியோஜி மருயாமா கூறுகையில், இந்திய இசை ஒரு கலாச்சார அடையாளம் என்பதையும், இந்திய இசைக்கலைஞர்களுடன் இணைந்து இசை உருவாக்கும் யமஹாவின் நீண்டகால உறுதிப்பாட்டை இந்த PSRI தொடர் பிரதிபலிப்பதாகவும் தெரிவித்தார். மேலும் MISales துணை பொது மேலாளர் திரு. ரிஹான் சித்திகி, இந்திய வாடிக்கையாளர்கள் இசையை கற்றல், பயிற்சி மற்றும் நிகழ்த்தல் ஆகிய அனைத்து நிலைகளிலும் சிறந்த அனுபவம் கிடைக்கும்படி ஒலி தரமும் பயன்பாட்டு எளிமையும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

சந்தை வளர்ச்சி குறித்து MI Marketing மேலாளர் திரு. கஸுகி வத்தனபே பேசுகையில், இந்தியா யமஹாவிற்கான முக்கிய வளர்ச்சி சந்தை எனவும், உள்ளூர் இசைக் கலைஞர்களுடன் நெருங்கிய ஒத்துழைப்பில் உருவாக்கப்பட்ட PSRI510 மற்றும் PSRI610 கீபோர்டுகள் அதிக மதிப்புவிலை அம்சங்களுடன் மேம்பட்ட இசை உருவாக்கத்தை எளிதாக்கும் எனவும் தெரிவித்தார். தப்லா, மிருதங்கம், தான்புரா கொண்ட Riyaz பயிற்சி, விரிவான Indian Voices & Styles, சக்திவாய்ந்த உள்ளமைக்கப்பட்ட ஆம்ப்ளிபிகேஷன் ஆகிய அம்சங்களுடன், PSRI610 ₹34,990 மற்றும் PSRI510 ₹27,990 விலையில் கிடைக்கின்றன.

# ராயல்ஓக் ஃபர்னிச்சர் கூடுவாஞ்சேரியில் பிரதான (ஃபிளாக்ஷிப்) ஸ்டோரை திறந்து, உலகத் தரமான ஃபர்னிச்சர் கலெக்‌ஷனை அறிமுகம் செய்கிறது!

சென்னை, ஜன.24




இந்தியாவின் எண் 1 ஃபர்னிச்சர் பிராண்டான ராயல்ஓக் ஃபர்னிச்சர், சென்னையின் கூடுவாஞ்சேரி நகரில் தனது புதிய ஃபிளாக்ஷிப் ஸ்டோரை 13,000 சதுர அடி பரப்பில் திறந்துள்ளது. லிவிங் ரூம், படுக்கையறை, டைனிங், ஸ்டடி & ஆபிஸ், அவுட்டோர், ஹோம் டெகோர் மற்றும் மெட்ரஸ் போன்ற அனைத்து வீட்டு பகுதிகளுக்கும் தேவையான சர்வதேச தரமான ஃபர்னிச்சர் ஒரே இடத்தில் கிடைக்கிறது.இந்த தொடக்க விழா ராயல்ஓக் ஃபர்னிச்சர் தலைவர் திரு. விஜய் சுப்ரமணியம், மேலாண்மை இயக்குநர் திரு. மாதன் சுப்ரமணியம், மூத்த நிர்வாகிகள் மற்றும் கூடுவாஞ்சேரி தேவகி ட்ரேடர்ஸ் ஃப்ராஞ்சைஸி பங்குதாரர் திரு. கே கார்த்திக் முன்னிலையில் நடைபெற்றது. இந்த விரிவாக்கம் தரம், குறைந்த விலை மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் ராயல்ஓக்கின் உறுதியையும் வெளிப்படுத்துகிறது. விஜய் சுப்ரமணியம் கூறியபடி, "கூடுவாஞ்சேரியில் எங்களது ஃபிளாக்ஷிப் ஸ்டோரைத் தொடங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்தியா மற்றும் UAE முழுவதும் 200க்கும் மேற்பட்ட ஸ்டோர்களுடன், சர்வதேச தரமான ஃபர்னிச்சர்களை எளிய விலையில் வாடிக்கையாளர்களுக்குவழங்குவதேஎங்களதுஇலட்சியம்.கூடுவாஞ்சேரி மக்களுக்கு சேவை செய்து, அவர்களின் கனவு இல்லங்களை உருவாக்க உதவ ஆவலுடன் இருக்கிறோம்."

# சருமம், கேசம், நகம் ஆகியவற்றின் ஆரோக்கியத்தைப் பராமரிக்க உதவும் நியூட்ரிலைட் பயோட்டின் சி பிளஸ் ஆம்வே இந்தியா அறிமுகம்!

கோவை, ஜன.24

இன்றைய நாட்களில் இரவில் நேரம் கழித்து உறங்குவதாலும், அதிக மன அழுத்தத்தின் காரணமாகவும், ஊட்டச்சத்துக்கள் குறைந்த உணவுகளை உட்கொள்ளுவதாலும் நல்ல ஆரோக்கிய நிலையில் காணப்படும் கேசமும், சருமமும் நகங்களும் கூட பொலிவிழந்து போகக்கூடும். உடலின் உள்ளிருந்தே அழகைப் பேணும் தீர்வுகளை நுகர்வோர் அதிக அளவில் விரும்புகின்றனர். இந்நிலையில் ஆரோக்கியத்துக்கும் நல்வாழ்வுக்கும் உதவும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான ஆம்வே இந்தியா,நியூட்ரிலைட் பயோட்டின் சி பிளஸை (ஸிங்கும் பீட்டா கரோட்டினும் அடங்கியது) அறிமுகப்படுத்துகிறது. ஆம்வே இந்தியாவின் நிர்வாக இயக்குநர் ரஜ்னீஷ் சோப்ரா இந்த அறிமுகத்தைக் குறித்து கூறும்போது இது அறிவியல் பூர்வமாக உருவாக்கப்பட்ட ஓர் ஊட்டச்சத்து மருந்தாகும். ஆரோக்கியமான கேசத்தையும், சருமத்தையும், நகங்களையும் உடலின் உள்ளிருந்தே பேண உதவும் மூலப்பொருட்களைக் கொண்டுள்ளது.




இது 'பயோட்டினை மட்டும்' கொண்ட ஒரு செய்முறை அல்ல. இந்த சப்ளிமெண்டில் இருப்பது ஒரே மூலப்பொருளும் அல்ல. இதில் பயோட்டின், வைட்டமின் சி, துத்தநாகம் ஆகியவை மட்டுமல்லாமல் பீட்டா கரோட்டினும் அடங்கியுள்ளது. இன்றியமையாத பரிந்துரைக்கப்பட்டுள்ள ஊட்டச்சத்துக்களின் 100% ஐ வழங்கும் இந்த தயாரிப்பு அறிவியல் அடிப்படையிலான ஊட்டச்சத்திலும் தாவர அடிப்படையிலான ஆரோக்கியத்திலும் ஆம்வே வைத்திருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. நியூட்ரிலைட்டின் 90 ஆண்டுகளுக்கும் மேலான ஊட்டச்சத்து நிபுணத்துவத்துடன் உருவாக்கப்பட்ட இந்தத் தயாரிப்பு, பரிந்துரைக்கப்படும் தினசரி ஊட்டச்சத்து அளவுக்கு இணங்க இன்றியமையாத ஊட்டச்சத்துக்களை ஒன்றிணைத்து, அன்றாட ஊட்டச்சத்தின் மீது ஆம்வே கொண்டுள்ள நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்று கூறினார். கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இன்றியமையாத ஊட்டச்சத்துக்களின் ஒட்டுமொத்தக் கலவையை நியூட்ரிலைட் பயோட்டின் சி பிளஸ் (ஸிங்கும் பீட்டா கரோட்டினும் அடங்கியது) கொண்டுவருகிறது. பயோட்டின் கேசவளர்ச்சிக்கும், ஃபாலிக்கிள் ஆரோக்கியத்துக்கும் உதவுகிறது. ஸிங்க் நகங்களை வலுப்படுத்தி அவற்றின் ஆரோக்கியத்தைப் பராமரிக்க உதவுகிறது..18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுதுடையவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள நியூட்ரிலைட் பயோட்டின் சி பிளஸின் (ஸிங்கும், பீட்டாகரோட்டீனும் அடங்கியது) ஒரு மாத்திரையை ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் ஒரு சீரான உணவுமுறை ஆகியவற்றின் ஒரு பகுதியாக தினமும் உட்கொள்ள வேண்டும்.



கோயம்புத்தூர் மாவட்டத்தில், அன்னூர் வட்டாரம் பசூர் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்டம் 2025 26 ஆம் நிதி ஆண்டின் வாழ்வாதார தொகுப்பின் கீழ் செம்பருத்தி மற்றும் மகாலட்சுமி மகளிர் சுய உதவிக் குழுவினரின் MS கார்மெண்ட்ஸ் நிறுவனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டார். உடன் அன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உமாசங்கரி, மகேஸ்வரி, வட்டாட்சியர் யமுனா, (மகளிர் திட்டம்) உதவி திட்ட அலுவலர் உட்பட பலர் உள்ளனர்.

# கண்ணட அள்ளி அடுத்த கெட்டம்பட்டி கிராமத்தில் 10 ஆண்டுகளாக தார் சாலைக்காக காத்திருக்கும் கெட்டம்பட்டி கிராம மக்கள்!

கிருஷ்ணகிரி, ஜன.24



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுகாவிற்கு உட்பட்ட கண்ணன்டஹள்ளி அடுத்த கெட்டம்பட்டி கிராமத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள்வசித்து வருகின்றனர். இந்த கிராமத்திலிருந்து கூச்சூர் வழியாக செல்லும் சாலை சுமார் 5 கிலோமீட்டர் நீளமுள்ள சாலை, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு தார் சாலையாக அமைக்கப்பட்டது. நீண்ட நாட்களாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ப்படாததால், தற்போது அந்த தார் சாலை முற்றிலும் சேதமடைந்தது. தார் இருந்த அடையாளமே தெரியாத அளவிற்கு மண் சாலையாகவும், குண்டும் குழியுமாகவுமே காட்சியளிக்கிறது. தினந்தோறும் பள்ளி வாகனங்களில் செல்லும் குழந்தைகள் மற்றும் பேருந்துக்காக நீண்ட தூரம் நடந்து செல்லும் மாணவமாணவியர் இந்த குண்டும் குழியுமான சாலையினால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். மருத்துவ பரிசோதனைக்காக வாகனங்களில் செல்லும் கர்ப்பிணிப் பெண்கள், இந்த மோசமான சாலையில் பயணம் செய்வதால் உடல் உபாதைகளுக்கும், பெரும் அச்சத்திற்கும் உள்ளாகின்றனர். சாலை மிகவும் மோசமாக இருப்பதால், அவசர காலங்களில் 108 ஆம்புலன்ஸ் கூட கிராமத்திற்குள் வர முடியாத அவல நிலை உள்ளது. இதனால் உயிரிழப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளிடமும் பலமுறை மனுக்கள் அளித்து விட்டோம். ஆனால், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டுகின்றனர். சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து போர்க்கால அடிப்படையில் புதிய தார் சாலை அமைத்து தர வேண்டும். அந்த பகுதி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# கிருஷ்ணகிரியில் அகில இந்திய பாவர்ட் பிளாக் கட்சியின் ஆலோசனாக் கூட்டம்!

கிருஷ்ணகிரி, ஜன.24

கிருஷ்ணகிரி அருகே உள்ள குத்தாரப்பள்ளியில் அகில இந்திய பாவர்ட் பிளாக் கட்சியின் நிர்வாகிகளின் ஆலோசனைக்கூட்டம் நடைப்பெற்றது.

கிருஷ்ணகிரி மாவட்ட அகில இந்திய பாவர்ட் பிளாக் கட்சியின் மாவட்ட அமைப்பு செயலாளர். பாலாபிரசாந்த் தலைமையில் நடைப்பெற்ற இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் கர்ணன், மாநில செயற்குழு உறுப்பினர் அன்பு ரமேஷ்,, மாநில மாணவர் அணி செயலாளர் பாஸ்கர பாண்டியன். மாநில மகளிர் அணி தலைவி பானு கருணாகரன், நுகர்வோர் அமைப்பின் மாநில தலைவர் நவாப், மாநில பொதுச் செயலாளர்.

சந்திரமோகன் ஆகியோர் முன்னிலையில் நடைப்பெற்ற இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக அகில இந்திய பாவர்ட் பிளாக் கட்சியின் முன்னாள் சட்ட மன்ற கூறுப்பினரும், தமிழ் மாநில பொதுச் செயலாளருமான டாக்டர் கதிரவன் கலந்துக் கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த டாக்டர் கதிரவன் மக்கள் விருப்புகிறார்கள் என்பதற்காக இலவசங்கள் கொடுக்கிறோம், ஏழை, ஏழையாகவே இருக்க வேண்டும் என்பதற்காக அரசியல் கட்சியினர் சாணக்கியமாக செயப்படுவதாக தெரிவித்தார்.

1972 ல் எம்.ஜி.. ஆர். திமுகவை விட்டு வெளியே வந்த போது இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அவருடன் வெளியே வந்ததது, ஆனால் விஜய் கட்சி ஆரம்பிக்கும் போது யாரும் கூட வரவில்லையே,

இன்று கிராமத்தில் யாருக்கு தெரியும் விஜயைபத்தி ஆனால் சிட்டியில வேணுமின்னா இருக்கலாம் அது மட்டுமில்ல அரசியல் சாணக்கியம் அவருக்கு தெரியுமா என்று கேள்வி எழுப்பினர்.

மேலும் இந்திய அளவில் கடைசி வரைக்கும் கிளைச் செயலாளர்களை வைத்துள்ள ஒரே கட்சி திமுக, மற்றும் அதிமுகவை தவிற வேற எந்த கட்சியும் இல்லை என்று குறிப்பிட்டார்.

தமிழகத்தில் இரண்டு பக்கமும் திமுக, அதிமுக ஆகிய இருக்கட்சிகளும் பெரும் கூட்டணி அமைத்து போட்டியிடும் போது தமிழக வெற்றிக்கழகம் இல்லாமல் போய்விடும் அதனால் அவர்கள் நினைப்பது தவறான எண்ணம் என்று குறிப்பிட்டார்.

அப்போது கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், தேனி, திண்டுக்கள், மதுரை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த முக்கிய நிர்வாகிகளும் கலந்துக் கொண்டனர்.

# நாட்றம்பள்ளியில் எருது விடும் விழா!

திருப்பத்தூர், ஜன.24



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் நம்பர் 1 கொத்தூர் கிராமத்தில் நடைப்பெற்ற தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான எருது விடும் நிகழ்ச்சியில்திருப்பத்தூர்மாவட்டஊராட்சி குழு தலைவர் மாநில பெற்றோர் ஆசிரியர் கழகதுணைதலைவர்நாட்றம்பள்ளிமேற்கு ஒன்றிய கழக செயலாளர் என் கே ஆர் சூரியகுமார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு எருது விடும் நிகழ்ச்சியை கொடி அசைத்து துவக்கி வைத்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் கபிலன் கணேசன் கோவிந்தராஜ் கலை இலக்கிய பகுத்தறிவு அமைப்பாளர் ஜவகர் ஒன்றிய கவுன்சிலர் காந்தி ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ் ஓட்டுனர் அணி அமைப்பாளர் சுரேஷ் மற்றும் அரசு துறை அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

# ஓமலூர் அருகே உடலில் டீசலை ஊற்றி போலீஸ் நிலையம் முன்பு வாலிபர் தற்கொலை முயற்சி!



ஓமலூர், ஜன 24–

ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டி போலீஸ் ஸ்டேஷன் முன்பு வாலிபர் தீ குளிக்க முயற்சி. பொய் புகாரில் விசாரணை என்ற பெயரில் போலீசார் அலைக்கழிப்பதாக புகார் தெரிவித்தார்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள ஊ. மாரமங்கலம் ஊராட்சி புதூர் பகுதியைச் சேர்ந்தவர் குமரேசன்(31). அதே பகுதியைச் சேர்ந்த அஜித் குமார்(25). இருவரும் உறவினர்கள். இந்நிலையில் அஜித்குமார் சில மாதங்களுக்கு முன்பு தனது மனைவி காணாமல் போனதால் குமரேசன் மீது சந்தேகத்தின் பேரில் புகார் கொடுத்துள்ளார். இந்த புகாரில் போலீசார் குமரேசனை அழைத்து விசாரணை செய்துள்ளனர். இந்த புகாரில் குமரேசனுக்கு அஜித்குமாரின் மனைவி காணாமல் போனதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என தெரிய வந்ததை தொடர்ந்து அப்போது விட்டுள்ளனர். தொடர்ந்து தற்போது குடும்பத் தகராறு காரணமாக அஜித்குமார் விஷம் அருந்தியதாக கூறப்ப டுகிறது. தொடர்ந்துஅவரை மீட்டு சேலம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் அஜித்குமார் தொளசம்பட்டி போலீஸ் ஸ்டேஷனில் என்னை தகாத வார்த்தையால் குமரேசன் திட்டியதால் மனம் உடைந்து தற்கொலைக்கு முயன்றேன் என கூறியதைத் தொடர்ந்து மீண்டும் போலீசார் குமரேசனை விசாரணைக்கு அழைத்துள்ளனர். இதைத் தொடர்ந்து வாலிபர் குமரேசன் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட கூடாது என்பதற்க்காக தன் மீது தொடர்ந்து அவமதிப்பை ஏற்படுத்துவதாகவும் போலீசார் அடிக்கடி அழைத்து விசாரணை என்ற பெயரில் அலைக்கழிப்பதாகவும் கூறி தொளசம்பட்டி போலீஸ் ஸ்டேஷன் முன்பு தன் உடலில் டீசலை ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயன்றார். உடனடியாக போலீசார் அவரை தடுத்து அங்கிருந்த தண்ணீரை அவர் மீது ஊற்றி காப்பாற்றினர்.

பின்னர் குமரேசன் என் மீது பொய் புகார் கொடுக்கும் நபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போலீஸ் ஸ்டேஷன் முன்பு அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். தொடர்ந்து அவரை சமாதானம் செய்த போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தினர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்புடன் ஏற்பட்டது.



கிருஷ்ணகிரி மாவட்டம், அலியாளம் அணைக்கட்டின் வலது புறக்கால்வாய் நெடுகை 8.80கி.மீட்டரிலிருந்து புதிய கால்வாய் அமைத்து தென்பெண்ணையாற்றில் வரும் வெள்ள உபரிநீரினைகிருஷ்ணகிரிமாவட்டம்சூளகிரிமற்றும்தேன்கனிக்கோட்டைவட்டத்திலுள்ள 12 ஏரிகள் மற்றும் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம், தூள்செட்டி ஏரிக்கும் நீர் வழங்கும் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், நீர்வளத்துறை செயற்பொறியாளர் செந்தில் குமார், உதவி செயற்பொறியாளர் (கெலவரப்பள்ளி நீர்த்தேக்கம்) மோகன்ராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்ப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

தென்காசி ஜன.24

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆட்சித்தலைவர் ஏ. கே.கமல்கிஷோர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கானசிறப்புகுறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தென்காசி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள்நலத்துறைசார்பில்நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, கைபேசி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான காதொலிகருவி, சக்கரநாற்காலி , பெட்ரோல் ஸ்கூட்டர், வங்கிக்கடனுதவி , ஊன்றுகோல் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான 52 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள்.

தொடர்ந்து, 03 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு தலா ரூ.3,285 வீதம் ரூ.9855 மதிப்பீட்டிலான காதொலி கருவிகளையும், 01 மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூ.15,750 மதிப்பீட்டிலான சக்கர நாற்காலியினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மகிழ்நன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கணேசன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ரம்யா, இளநிலை மறுவாழ்வு அலுவலர் செல்வி.மஞ்சுமிதா மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

## சேலம் மாவட்டம் ஏகாபுரம் பகுதியில்

## ஸ்ரீ பெருமாள் , பஞ்சுமாதா கோவில்கள் நடை மூடல்!

### பூசாரிகள், முக்கியஸ்தர்கள் இடையே பிரச்சனை; பக்தர்கள் குற்றச்சாட்டு!!



சேலம்,ஜன.24

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை அடுத்துள்ள ஏகாபுரம் பகுதியில் அமைந்துள்ள, அருள்மிகு ஸ்ரீ பெருமாள் மற்றும் ஸ்ரீ பஞ்சுமாதா திருக்கோவிலில் பணிபுரியும் பூசாரிகள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் இடையே ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சனை காரணமாக, கடந்த மூன்று மாதமாக கோவில் நடை சாத்தப்பட்டுள்ளது. இது குறித்து ஊர் தரப்பினர் கூறும்போது, கோவில் உண்டியலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் தங்கம், வெள்ளி, உள்ளிட்ட காணிக்கை பொருட்களை, அங்கு பணி புரியும் பூசாரிகளில் ஒரு தரப்பினர் எடுத்து சென்று விட்டதாகவும், இது குறித்து அவர்களிடம் கேட்டால் உண்டியலில் வரும் காணிக்கை பொருட்கள் தங்களுக்கே சொந்தம், இந்தப் பொருட்கள் மீது உரிமை கொண்டாட யாருக்கும் உரிமையில்லை, பூசாரி பணிகளில் புதிதாக சேர்ந்தவர்களுக்கு கோவில் பணத்தை எவ்வித பங்கும் தர முடியாது, எவ்வித பலனும் எதிர்பாராமல் வேலை செய்ய வேண்டும். அதே சமயத்தில் உண்டியலில் சேரும் தங்கம், வெள்ளி, உள்ளிட்ட பொருட்களுக்கான உரிமை பழைய பூசாரிகளுக்கே உண்டு எனவும், மேலும் உண்டியலில் சேரும் பணத்தில் ஏராளமான தில்லு முல்லுகள் நடைபெறுவதாகவும், பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் பணத்தில் கோவிலில் முறையாக எவ்வித பணிகளும் மேற்கொள்வதில்லை, இதுகுறித்து பூசாரிகளிடமும், நிர்வாகிகளிடமும் கேட்டால் தங்களை மிரட்டுவதாகவும், இவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக கடந்த மூன்று மாதமாக சாமிக்கு எவ்வகை நடைபெறாமல், பக்தர்கள் தாங்களாகவே சுவாமிக்கு பூஜைகள் செய்து வருகின்றனர். மேலும் பூஜைக்கு பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களும் அழுக்குகள் ஏற்பட்டு சேதம் அடைந்து காணப்படுவதாக குற்றம் சாட்டிய ஊர் மக்களின் ஒரு தரப்பினர், இதுகுறித்து தற்போது நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்திருப்பதால், இறுதித் தீர்ப்பு வரும் வரை கோவிலை திறக்கப் போவதில்லை என கோவில் நிர்வாகிகளும் பூசாரிகளுக்கு ஆதரவாக செயல்படுபவர்களும் தங்களை மிரட்டுவதாக, அப்பாவி பொதுமக்கள் தெரிவித்தனர். பூசாரிகளுக்குள் ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்சினை காரணமாக, கோவிலுக்கு வரும் பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர்.



## சேலம் சூரமங்கலம் 23வது கோட்டத்தில், அதிமுக பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்!

சேலம்,ஜன.24

சேலம் மாநகர் மாவட்ட அதிமுக சூரமங்கலம் பகுதியில் உள்ள 23வது கோட்டத்தில், அதிமுக பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சேலம் மாநகர்மாவட்ட அதிமுக செயலாளரும், முன்னாள் மண்டல குழு தலைவருமான, ஏகே எஸ்எம் பாலு மற்றும் சேலம் மாநகர் மாவட்ட அதிமுக விவசாய அணி செயலாளர் சங்கர், ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு, பூத் கமிட்டி நிர்வாகிகளுக்கு, எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் எவ்வாறு பணியாற்றுவது என்பது குறித்து பல்வேறு ஆலோசனைகளை கட்சியினருக்கு வழங்கினர். பெயிண்டர்விரிவாக பேசிய மாநகர செயலாளர் பாலு, வரும் சட்டமன்றத் தேர்தலில், கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, யாரைக் கைகாட்டுகிறாரோ, அவர் கூட்டணி கட்சியை சார்ந்தவராக இருந்தாலும், அதிமுகவை சேர்ந்தவராக இருந்தாலும், அவர்களை மாபெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து, தமிழகத்தில் மீண்டும் கழக பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில், மீண்டும் புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சியை அமைத்திட அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு, அதிமுக ஆட்சி அமைந்திட உழைத்திட வேண்டும் என்றும், வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுக ஆட்சி அகற்றப்பட்டு, தமிழகத்தில் அதிமுக ஆட்சி மலர்ந்திடும் என, சேலம் மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் பாலு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## த.வெ.க.கட்சிக்கு விசில் சின்னம்:


## தொண்டர்கள் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

சேலம்,ஜன.24

தமிழ் திரைப்பட நடிகர் விஜய் கடந்த வருடம் தொடங்கிய அரசியல் இயக்கமான, தமிழக வெற்றிக்கழகம், வரும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏதுவாக, தங்களுக்கு பொது சின்னம் ஒதுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு எழுதிய கடிதத்தின் பலனாக, இன்று அக்கட்சிக்கு விசில் சின்னம் ஒதுக்கப்படுவதாக, தேர்தல் ஆணையம் தனது அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள அக்கட்சியினர் பட்டாசு வெடித்து விசில் ஊதி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி மற்றும் மணக்காடு உழவர் சந்தை ஆகிய பகுதிகளில், தமிழக வெற்றி கழகத்தைசேர்ந்தஏராளமானநிர்வாகிகள், விசில் ஊதி அப்பகுதி மக்களுக்கும், வியாபாரிகளுக்கும், இனிப்புகளை வழங்கி, பட்டாசு வடித்து தங்களது கட்சிக்கு விசில் சின்னம் ஒதுக்கியுள்ளது குறித்து, பொதுமக்களுக்கு எடுத்துக் கூறி, மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். மேலும் இது குறித்து கூறிய அவர்கள், வரும் சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றி கழகம் மிகப்பெரிய இமாலய வெற்றி பெற்று, தமிழகத்தில் விஜய் முதலமைச்சராக பொறுப்பேற்பது உறுதி என்றும், விஜய்க்கு மக்களின் ஏகோபித்த ஆதரவு உள்ளதால் நிச்சயம் அவர் தலைமையில் தமிழகத்தில் தமிழக வெற்றிக்காக ஆட்சி அமையும் என உறுதிபட தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட செயலாளர் தமிழன் பார்த்திபன். சேலம் மாநகர வழக்கறிஞர் பிரிவு ஒருங்கிணைப்பாளர் சேதுபதி மாரியப்பன், பகுதி செயலாளர்கள் ஹரிஹரசுதன், சையதுஅலாவுதீன், 13வது டிவிசன் செயலாளர் பூவேந்தன், இணைச்செயலாளர் இஸ்மாயில், பொருளாளர் தினேஷ், துணைச்செயலாளர் கோவிந்தராஜ், கார்த்திகா, மகளிர் அணி செயலாளர் பரிமளா, உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழக வெற்றி கழகத்தினர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## சங்கராபுரம் அருகே

## மகன், 2 வயது குழந்தையுடன் இளம்பெண் மாயம்!



சங்கராபுரம், ஜன.24–

சங்கராபுரம் அருகே பெண் இரண்டு குழந்தைகளுடன் மாயமான பெண்ணை – போலீசார் தேடி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அருகே உள்ள ரங்கப்பனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஏழுமலை. இவரது மனைவி அம்பிகா (வயது 30). இவர்களுக்கு பர்தேஷ் (வயது 8), கவினேஷ் (வயது 2) என இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

கடந்த 17ஆம் தேதி மேல்மருவத்தூர் கோவிலுக்கு சென்று வீடு திரும்பிய அம்பிகாவை, அவரது கணவர் உள்ளிட்ட குடும்பத்தினர் திட்டியதாக கூறப்படுகிறது.

இதனால் மனமுடைந்த அம்பிகா, வீட்டிலிருந்து இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வெளியே சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை.

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடியும் அம்பிகா மற்றும் குழந்தைகள் எவரும் கிடைக்காததால், அம்பிகாவின் தாய் மீனா வடபொன்பரப்பி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து, காணாமல் போன அம்பிகா மற்றும் இரண்டு குழந்தைகளையும் தீவிரமாக தேடி வருகின்றனர்.

## த.வெ.க.கட்சிக்கு விசில் சின்னம்:

## தொண்டர்கள் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!



பாலக்கோடு.ஜன.24–

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பேருந்து நிலையம் முன்பு த.வெ.க கட்சி சின்னம் அறிவித்ததை தொடர்ந்து பாலக்கோடு தொகுதி ஒருங்கிணைப்பாளர் குமார் தலைமையில் தொண்டர்கள் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

நிகழ்ச்சிக்கு மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன், பாலக்கோடு பேரூர் கழக செயலாளர் விக்னேஷ், முன்னாள் நகர தலைவர் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழக வெற்றி கழகத்திற்கு சின்னம் ஒதுக்க கோரி இந்திய தேர்தல் ஆணையத்திடம் விண்ணப்பித்திருந்த நிலையில்

தமிழக வெற்றி க்கழக வேட்பாளர்கள் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வகையில் விசில் சின்னத்தை ஒதுக்கீடு செய்து தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதனை வரவேற்று த.வெ.க நிர்வாகிகள் தொண்டர்கள் பாலக்கோடு பேருந்து நிலையம் முன்பு விசில் சின்னத்தை கைகளில் ஏந்தி, விசிலடித்து, பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சியில் இணை செயலாளர் சஞ்சீவன், துணை செயலாளர் ஜோதி, செயற்குழு உறுப்பினர் இந்திராணி, பெரியசாமி, சக்திவேல், மாவட்ட வாக்குசாவடி அணி சீராளன், தொகுதி தகவல் தொழில்நுட்ப தொகுதி நிர்வாகி ஜெயபிரகாஷ், மணி, நகர இளைஞர் அணி நிர்வாகி கார்த்திக், நகர மாணவர் அணி நிர்வாகி பிரபு மற்றும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



நாமக்கல்லில் ஹெல்மெட் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் ஏராளமானோர் இருசக்கர வாகனங்களுடன் பங்கேற்றனர்